[1975 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறு தொழில்களுக்கு தேவையான மூலப்பொருள்கள் சிலவற்றில் பற்றாக்குறை ஏற்பட்டது குறித்துப் புகார்கள் உள்ளன. கூடியமட்டில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு தொழில்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. எம். சுரேந்திரன்: கோவை மாவட்டத்தில் சிறு தொழில்கள் பரவலாக வளர்ந்துள்ளன. அந்த இடத்தில் எந்த எந்த தொழில்களுக்கு என்ன என்ன அளவில் மூலப்பொருள்கள் பற்றாக்குறை ஏற்பட்டது, எந்த அளவில் அதற்கு அரசாங்கம் உதவி செய்திருக்கிறது, அதன் மூலம் தொடர்ந்து வருஷம் பூராவும் தொழில்கள் நடைபெறுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேவையான மூலப்பொருள்கள் நிலக்கரி, பிக் அயர்ன், மோட்டார் ஸ்டாம்பிங்ஸ், காப்பர் ஒயர்ஸ் என்று கேள்வியில் சொல்லப் பட்டிருக்கிறது. காப்பர் ஒயர்ஸ் பற்றி தட்டுப்பாடு இல்லை, நேற்று முன்தினம் கோவையில் நடைபெற்ற விழாவில் கூட சிறு தொழில் அதிபர்கள் இப்போது மற்ற மூலப்பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லையென்று சொன்னார்கள்.

Oil for industries

* 516 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state:

(*a*) wheher the current oil crisis has affected many industries in the State:

(*b*) if so, the details of the industries so affected; and

(*c*) the steps taken by the Government thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) கட்டுப்படியாகாத உலை எண்ணெய் விலையால், சில சிமிட்டி தொழில் பிரிவுகள் உற்பத்தியை ஓரளவுக்குக் குறைத்துக் கொண்டது.

1975 ஏப்ரல் 1]

(உ) (i) சிமிட்டித் தொழிற்சாலைகளும், இவ்வரசும் வற்புறுத்தியதின்பேரில் உலை எண்ணெய் விலையின் ஏற்றத்தால் உற்பத்தியில் ஏற்பட்ட விலை உயர்வை மட்டுப்படுத்த ஒரு டன் சிமிட்டிக்கு ரூ. 50-ஐ எண்ணெய் உதவிப் பணமாக இந்திய அரசு வழங்கியுள்ளது.

(ii) சிமிட்டித் தொழில் பிரிவுகளில் உலை எண்ணெய்க்குப் பதிலாக வேண்டிய அளவு நிலக்கரி இருப்பை வைக்க இந்திய அரசு வாக்களித்துள்ளது.

(iii) இந்திய அரசு அமைத்த எண்ணெய் விலைகள் குழுவிடம் எண்ணெய் நெருக்கடியால் ஏற்பட்ட எதிர்விளைவுகளை சமாளிக்க வேண்டி தக்க பரிந்துரைகள் வழங்க இவ்வரசு வேண்டியுள்ளது.

(iv) மாநில அரசு உடைமையில் உள்ள போக்குவரத்து நிறுவனங்களில் டீசல் எண்ணெய் உபயோகிப்பதில் சிக்கனத்தையும், திறனையும் வளர்க்க இவ்வரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, பெரிய தொழிற்சாலைகளான சிமெண்ட் போன்றவைகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சிறு தொழிற்சாலைகளுக்குத் தேவையான பர்னஸ் ஆயில் கிடைக்காததாலும் விலையேற்றத்தின் காரணமாகவும் அவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு உதவி செய்ய மத்திய சர்க்காரிடம் வாதாடிப் பெற்றுத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: In respect of the supply of furnace oil to cement units in Tamil Nadu, the matter was taken up with the Government of India. The Government of India have since sanctioned oil subsidy of Rs. 50 per tonne of cement.

அதுகூட upto *16—11—1974.*

The Government of India have also been requested to consider coal subsidy on the analogy of oil subsidy for the sea-borne coal.

பெரிய தொழிற்சாலை என்றுதான் பிரிவு இருக்கிறது. சிறு தொழிற்சாலை என்ற பிரிவு இல்லை.

[1975 ஏப்ரல் 1

திரு. ஏ. சுப்ரமணியம் : தலைவர் அவர்களே, பஞ்சாலைகள் போன்ற தொழிற்சாலைகள் இந்த மின்வெட்டு உள்ள காலத்தில் ஜெனரேட்டரைப் பயன்படுத்தி ஆலைகளை ஓட்டிக் கொண்டிருக்கின்றன. ஜெனரேட்டர்களுக்கு டீசல் எண்ணெய் கிடைக்காமல் ஜெனரேட்டர்களை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஜெனரேட்டர்களுக்கு போதுமான டீசல் எண்ணெய் கிடைக்கவில்லையென்று புகார் வரவில்லை. அப்படி வந்தால் பரிசீலிக்கலாம். இப்போது பருத்தி ஆலைகள் ஜெனரேட்டர்களைக் கொண்டு சமாளித்து வருவதாகத் தான் தகவல் கிடைத்திருக்கிறது.

தஞ்சாவூர் பனகல் கட்டடம்

* 517 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் பனகல் கட்டடத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் பனகல் கட்டிடத்தில் குறிப்பாக மாவட்ட பஞ்சாயத்து அலுவலர்களின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதற்கு போதுமானதாக இடம் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தக் கட்டிடத்தில் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர், மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி அலுவலகங்கள் இயங்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பனகல் கட்டிடத்தை விரிவுபடுத்தி இந்த இரண்டு அலுவலகங்களைப் பிரித்து மாவட்ட பஞ்சாயத்து அலுவலகங்கள் மட்டும் இயங்கக்கூடிய இடமாக ஆக்குவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, பனகல் கட்டிடத்தில் மேலும் இடவசதி தேவைப்படுவதால் அதற்காக ரூ. 2.5 லட்சத்தில் ஒரு திட்டத்தைத் தயாரித்து இப்போது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.